2017.06.07

# ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
# HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ජනාධිපති
අතිගරු මෛත්‍රීපාල සිරිසේන මැතිතුමා
ජනාධිපති ලේකම් කාර්යාලය
කොළඹ 01

අතිගරු ජනාධිපතිතුමනි,

<u>අනුස්මරණය හා සංහිඳියාව</u>

ආයුධ සන්නද්ධ අරගලයේ අග භාගයේදී ජීවිතය අහිමිවූවන් අනුස්මරණය සඳහා මුලතිව්හි, ජේසු සමාජයේ, ගරු එලිල් රාජේන්ද්‍රන් පියතුමන් විසින් සංවිධානය කරන ලද අනුස්මරණ ක්‍රියාකාරකම් සම්බන්ධයෙන් ප්‍රශ්න කිරීම සඳහා අවස්ථාවන් ගණනාවකදී පොලිසිය විසින් තමන් කැඳවන ලද බවට එතුමන් වෙතින් මානව හිමිකම් කොමිෂන් සභාව වෙත පැමිණිල්ලක් ඉදිරිපත්ව තිබේ. එකී අනුස්මරණ ක්‍රියාදාමය දියත් කිරීමට නියමිතව තිබුණේ මුලතිව්හි, මුලෙයි වයික්කාල්හි ස්ථාපිත කරනු ලබන ස්ථිර ස්මාරකයක තැන්පත් කිරීම සඳහා එකී ජීවිත අහිමිවූවන්ගේ නම් ලේඛණාරූඪ කිරීමෙනි.

මෙම සිද්ධිය සම්බන්ධයෙන් ප්‍රශ්න කිරීම පිණිස මුලතිව් සහ වවුනියා පොලිස් ස්ථානවල පෙනී සිටින ලෙස අවස්ථා ගණනාවකදී පොලිසිය විසින් එලිල් පියතුමා කැඳවා ඇත. එකී අනුස්මරණ ක්‍රියාදාමය ක්‍රියාත්මක කිරීම වළකාලමින් පොලිසිය විසින් අධිකරණ තහනම් නියෝගයක්ද ලබා ගෙන තිබේ. එකී අධිකරණ නියෝගයෙන් අනතුරුව, අනුස්මරණය කිරීම සඳහා ලේඛනාරූඪ කිරීමට යෝජිත නම් අතර එල්.ටී.ටී.ඊ සාමාජිකයින්ගේ නම් නොමැති බව තහවුරු කර ගැනීම සඳහා යෝජිත සියළුම නම් ඉදිරිපත් කරන ලෙස පොලිසිය වෙත කැඳවන ලද පියතුමන්ගෙන් ඉල්ලා ඇත.

මෙකී අනුස්මරණෝත්සවය සම්බන්ධයෙන් පොලිසිය විසින් විවිධ පොලිස් ස්ථානවලදී සහ එතුමන්ගේ නිවසේදී පුන පුනා ප්‍රශ්න කිරීම හිංසාවක් බවත්, ශ්‍රී ලංකා ව්‍යවස්ථාවෙහි ප්‍රකාශිතව පිළිගනු ලැබ ඇති යාමීම්, භාෂණයේ හා සමාගමයේ ස්වකීය නිදහසට එමගින් බාධා පැමිණෙන බවත්, එලිල් පියතුමා මානව

හිමිකම් කොමිෂන් සභාව වෙත පැමිණිලි කර ඇත. තවද, රාජේන්ද්‍රන් පියතුමන්ගේ වියපත් දෙමාපියන්ද ප්‍රශ්න කිරීමට භාජනය කිරීම නිසා ඔවුන්ද අසහනයට හා සිත්තැවුලට පත්ව ඇත.

තිස් වසරක ආයුධ සන්නද්ධ අරගලයෙන් පසු, ශ්‍රී ලංකාව වාර්ගික සම්බන්ධතා ගොඩනගිමින් සංහිදියාව කරා පියමං කිරීමේ ප්‍රයත්නයක දැනට යෙදී සිටී. එවන් ක්‍රියාදාමයක් තුළ, තම ප්‍රියයන්ගේ විප්‍රයෝගය ගැන ශෝකවීම සහ ඔවුන් අනුස්මරණය කිරීම සඳහා අවකාශය සහ හැකියාව සියළුම ප්‍රජාවන් සතුවීම වැදගත් වේ. එම නිසා, අනුස්මරණය වූ කලී සංහිදියා ක්‍රියාදාමයෙහි වැදගත් හා අනුකූලනිත ක්‍රියාකාරකමකි. සන්නද්ධ අරගලයේදී දිවි පිදූ සොල්දාදුවන් සිහිපත් කිරීම සඳහා ස්මාරකයන් ගණනාවක් අප විසින් මෙරටෙහි ස්ථාපිත කර ඇත. එපරිද්දෙන්ම, ස්වකීය පවුල් සාමාජිකයින් හා ප්‍රියයන් සැමරීම සඳහා ස්මාරක තැනීමේ අයිතිය සියළුම ප්‍රජාවන් සතුවිය යුතු වේ. වෙන්ව ගිය ස්වකීය ප්‍රියයෙකු වෙනුවෙන් ශෝකවීමේ හා සැමරීමේ අයිතිය කිසියම් පවුලකට අහිමි කිරීමට මියගිය තැනැත්තා එල්.ටී.ටී.ඊ සාමාජිකයෙකු වූයේය යන්න හේතු පාදක කොට ගත යුතු නොවේ. ස්වකීය තරාතිරම් හා දේශපාලන විශ්වාසයන් නොතකා ස්වකීය ප්‍රියයන්ගේ විප්‍රයෝගය සිහිපත් කිරීම සෑම පවුලක්ම සතු අයිතියකි.

එවන් ක්‍රියාදාමයකට අවකාශය ලබාදීම මගින් ශ්‍රී ලංකාවේ පුරවැසියන් ලෙස තම අයිතිවාසිකම් භුක්ති විඳීමට හැකිය යන විශ්වාසය අදාල පවුල් තුල ගොඩ නැගෙන අතර, එය සංහිදියාව කරා යන පොදු ගමනේ එක් අංගයක්ද වන්නේය. එකී අවස්ථාව අහිමි කිරීමෙන් වන්නේ වාර්ගික බෙදීම් තව තවත් වර්ධනය වී, සංහිදියා පරිශ්‍රමය අඩාලවීම පමණකි.

මෙකී භාවාර්ථය තුල ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව විසින් ජාතික ඒකාබද්ධතා හා සංහිදියා අමාත්‍යවරයාද වන, අතිගරු ජනාධිපතිතුමන් ගෙන් ගෞරව පූර්වකව අයැද සිටින්නේ ස්මරණය කිරීමේ ක්‍රියාකාරකම්වල යෙදීමට අදාල පවුල්වලට ඇති අයිතිය සහ එවන් ක්‍රියාකරකම්වල යෙදෙන්නාවූ පුද්ගලයින්ගේ ආරක්ෂාව තහවුරු කර දෙන ලෙසය.

රාජේන්ද්‍රන් පියතුමා විසින් කොමිෂන් සභාව වෙත ලබා දෙන ලද කාලක්‍රමානුගත සිද්ධීන් මාලාව මෙයට යාකර ඇති ඇමුණුමෙහි දක්වා ඇත.

ආචාර්ය දීපිකා උඩගම

සභාපතිනී

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව

**Dr. N. D. Udagama**
Chairperson
Human Rights Commission of Sri Lanka

පිටපත් : ගරු අග්‍රාමාත්‍යතුමා

නීතිය හා සාමය පිළිබඳ ගරු අමාත්‍යතුමා

සහජීවන, සංවාද හා රාජ්‍ය භාෂා පිළිබඳ ගරු අමාත්‍යතුමා

සභාපතිතුමිය, ජාතික සමගිය හා සංහිදියාව පිළිබඳ කාර්යාලය

එලිල් රාජේන්ද්‍රම් පියතුමා විසින් මානව හිමිකම් කොමිෂන් සභාව වෙත
ඉදිරිපත් කරන ලද පැමිණිල්ලෙහි විෂයගත ප්‍රධානතම කරුණු

1. **2017** මැයි මස **16** දින: පොලිසිය විසින් පස්වරු **7.30** ට එලිල් රාජේන්ද්‍රන් පියතුමා සහ තවත් දෙදෙනෙකු කැඳවා ඇත. මුල්ලිවයික්කාල්හි ස්ථාපිත ස්මාරකයේ ශිලා පුවරු මත කැටයම් කෙරෙන නම් වලට කිසියම් එල්ටීටීඊ සාමාජිකයන්ගේ නම් ඇතුළත් කර ඇත්දැයි ඔවුන්ගෙන් විමසා ඇත.

2. **2017** මැයි මස **17** දින: පොලිසිය විසින් මුලතිව් මහේස්ත්‍රාත්වරයා වෙත එළඹ, මුල්ලිවයික්කාල් නැගෙණහිර, සාන්ත පෝල් දේවස්ථානය අසළ ඉඩමේ ස්මරණෝත්සව තහනම් කිරීමේ නියෝගයක් ලබා ගෙන ඇත.

3. **2017** මැයි මස **18** දින: පොලිසිය විසින් මෙම උසාවි නියෝගය විවිධ ස්ථානවල ප්‍රදර්ශණය කෙරෙන පරිදි අලවා, එකී උත්සව භූමිය ආසන්නයට කිසිවෙකු නොයා යුතු බව සහ කිසිම ආගමික චාරිත්‍රයකට එහි අවසර නොදෙන බව ශබ්ද විකාශණ යන්ත්‍ර ආධාරයෙන් නිවේදනය කර ඇත.

   පස්වරු **1.00** ට පමණ, ප්‍රකාශයක් සටහන් කර ගැනීම සඳහා වවුනියාවට පැමිණෙන ලෙස බලකර සිටින දුරකථන ඇමතුමක් වවුනියාවේ පොලිස් අධිකාරිවරයාගෙන් රාජේන්ද්‍රන් පියතුමා වෙත ලැබී ඇත. එදිනම රාත්‍රි **8.30** පමණ, ලිඛිත සිතාසි සමග පොලිසිය රාජේන්ද්‍රන් පියතුමාගේ නිවසට පැමිණ ඇත.

4. **2017** මැයි මස **19** දින: වවුනියාවේ පොලිසිය විසින් කරන ලද ප්‍රශ්නකිරීම් කේන්ද්‍රගතව ඇත්තේ එල්ටීටීඊ සාමාජිකයින්ගේ නම් එකී ගල්පුවරු මත ඇත්තේද යන්න පිළිබඳවයි.

   එදිනම, පොලිසිය යාපනයේ, ඉලාවලයිහි පිහිටි, රාජේන්ද්‍රන් පියතුමාගේ දෙමාපියන්ගේ නිවස වෙත පැමිණ, ඔහුගේ වැඩ කටයුතු, ක්‍රියාකාරකම් සහ ආගියතැන් විමසා ඇත.

5. **2017** මැයි මස **20** දින: දැනට විභාගවෙමින් පවතින නඩුව සම්බන්ධයෙන් ප්‍රකාශයක් ලබා ගැනීම සඳහා පැමිණෙන ලෙස ලිඛිත සිතාසි මුලතිව් පොලිස් මූලස්ථානය වෙතින් රාජේන්ද්‍රන් පියතුමා වෙත ලැබුණි. ශිලාපුවරු සැකසීමේ ව්‍යාපෘතිය සම්බන්ධයෙන් පොලිසිය විසින් ගම්වාසීන්ගෙන්ද කරුණු විමසන ලදී. ප්‍රකාශයක් සටහන් කර ගැනීම සඳහා මැයි මස **22** වන දින ප්‍රදේශයේ ග්‍රාම නිලධාරිතැනද පොලිස් ස්ථානය වෙත කැඳවා ඇත.

6. **2017** මැයි මස **21** දින: පස්වරුවෙහි වැලිකන්ද නියෝජ්‍ය පොලිස්පතිවරයා රාජේන්ද්‍රන් පියතුමා අමතා, මැයි මස **22** වන දින මුලතිව් පොලිස් ස්ථානයට යාම අනවශ්‍ය බව දන්වා, ත්‍රස්ත විමර්ශන කොට්ඨාශය විසින් විමර්ශනයට භාජනය කිරීම සඳහා ශිලාලේඛණාරූඪ කර ඇති නම් ලැයිස්තුව පොලිසියට ඉදිරිපත් කරන ලෙස ඉල්ලා ඇත. රාත්‍රි **9.00**ට යළිත් ඇමතුමක් දුන් නියෝජ්‍ය පොලිස්පතිවරයා නම් ලැයිස්තුව ගැන විමසා ඇත.

7. **2017** මැයි මස **25** දින: ගල්පුවරු මත කැටයම් කිරීමට නියමිත නම් ලැයිස්තුව රාජේන්ද්‍රන් පියතුමා විසින් භාර දෙන ලද නමුත්, ලැයිස්තුවේ සඳහන් පුද්ගලයින්ගේ ලිපිනයන්ද අවශ්‍ය බව දන්වා ඇත. අදාල ලිපියෙන් තමන් සතුව නොමැති බව රාජේන්ද්‍රන් පියතුමා දැන්වූ කල්හි, එම ලැයිස්තුව අනවශ්‍ය බව පොලිසිය දන්වා ඇත. සියළුම නම් සම්බන්ධයෙන් විමර්ශන අවසන් කරන තුරු, තවදුරටත් නම් කැටයම් කිරීම් නොකල යුතු බවද පොලිසිය ඔහුට දන්වා ඇත.

HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

7-6-2017

அதிமேதகு மைத்திரிபால சிரிசேன அவர்கள்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி
சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,

**நினைவுகூரல் மற்றும் நல்லிணக்கம்**

ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்காக முல்லைத்தீவு இயேசு சங்கத்தின் அருட்தந்தை கௌரவ எழில் ராஜேந்திரன் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவுகூரல் செயற்பாடு சம்பந்தமாக விசாரிப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் பொலிஸார் தம்மை அழைத்ததாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். முல்லைத்தீவு, முள்ளிவைக்காலில் அமைக்கப்படும் நிரந்தர நினைவுத் தூபியில் உயிரிழந்தோரின் பெயர்களை கல்வெட்டில் பதித்து இந்த நினைவுகூரல் செயற்பாட்டை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வு சம்பந்தமாக விசாரிப்பதற்காக முல்லைத்தீவு மற்றும் வவுனியா போன்ற பொலிஸ் நிலையங்களினால் பல சந்தர்ப்பங்களில் அருட்தந்தை எழில் ராஜேந்திரன் அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார். அந்த நினைவுகூரல் நடவடிக்கையை தடைசெய்து பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவொன்றையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்த நீதிமன்ற தடையுத்தரவின் பின்னர் நினைவுகூருவதற்காக கல்வெட்டில் பதிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள பெயர்களிடையே எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் பெயர்கள் இல்லையென்பதனை உறுதி செய்துகொள்வதற்காக அனைத்துப் பெயர்களையும் சமர்ப்பிக்குமாறு பொலிஸார் அருட்தந்தையிடம் கோரியுள்ளனர்.

இந்த நினைவுகூரல் நிகழ்வு சம்பந்தமாக பொலிஸார் பல பொலிஸ் நிலையங்களில் மற்றும் அவரது வீட்டில் திரும்பத் திரும்ப விசாரணை மேற்கொள்வது அடக்குமுறையெனவும், மேலும் அவரது நடமாடும், பேச்சு மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரங்களுக்கு அதனூடாக தடங்கல் ஏற்படுவதாகவும் அருட்தந்தை எழில் ராஜேந்திரன் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். இவ்வுரிமைகள் யாவும் இலங்கையின் அரசியல் யாப்பினால் பாதுகாக்கப்படுகின்றன. மேலும், அருட்தந்தை எழில் ராஜேந்திரன் அவர்களின் வயோதிபப் பெற்றோரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் காரணமாக அவர்களும் மன வேதனைக்கு ஆளாகியுள்ளனர்.

முப்பது வருட கால உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், இலங்கையானது இனங்களுக்கிடையிலான உறவுகளை கட்டியெழுப்பி நல்லிணக்கத்தினை அடைந்துகொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அவ்வேளையில் யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்கான வாய்ப்பு சகல பிரஜைகளுக்கும்

இருத்தல் முக்கியமாகும். எனவே, நினைவுகூருதல் என்பது நல்லிணக்கச் செயற்பாட்டின்போது முக்கியமானதும் ஒருங்கிணைந்ததுமான செயற்பாடாகும். ஆயுதப் போராட்டத்தின்போது உயிர் நீத்த இராணுவத்தினரை நினைவுகூருவதற்காக பல நினைவுத்தூபிகள் இந்த நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே தமது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் உறவுகளை நினைவுகூருவதற்காக நினைவுத் தூபிகளை அமைத்துக்கொள்ளும் உரிமை சகல பிரஜைகளுக்கும் இருத்தல் வேண்டும். தம்மை விட்டுப் பிரிந்த உறவுகளை நினைவுகூருவதற்கான உரிமையை ஒரு குடும்பத்திற்கு மறுப்பதற்கு இறந்த நபர் எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவராக இருந்தார் என்பதனை காரணமாக எடுத்துக்கொள்ளலாகாது. உயிரிழந்தவரின் தராதரம் மற்றும் அரசியல் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு தமது உறவுகளின் பிரிவை நினைவுகூருவதற்கான உரிமை அனைத்துக் குடும்பங்களுக்கும் உண்டு.

அவ்வாறான செயற்பாட்டிற்கு வாய்ப்பினை வழங்குவதன் ஊடாக இலங்கையின் பிரஜைகள் என்ற வகையில் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு முடியும் என்ற நம்பிக்கையை குறிப்பிட்ட குடும்பங்களிடையே கட்டியெழுப்பப்படுவதுடன், அது நல்லிணக்கத்தை நோக்கிய பயணத்தின் ஒரு அங்கமாகவும் இருக்கும். அந்த வாய்ப்பினை மறுப்பதனால் இனங்களுக்கிடையிலான பிரிவு மேலும் விருத்தியடைந்து நல்லிணக்கத்திற்கான முயற்சியில் பின்னடைவு மாத்திரமே ஏற்படும்.

அதிமேதகு ஜனாதிபதியிடம், முக்கியமாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அமைச்சர் என்ற முறையில், ஆணைக்குழு வேண்டிக்கொள்வது என்னவெனில், குடும்பங்களின் நினைவுகூருவதற்கான உரிமை மற்றும் நினைவுகூரலில் பங்குபெற்றுவோரின் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அருட்தந்தை ராஜேந்திரன் அவர்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள நிகழ்வுகள் பற்றிய விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள **இணைப்பில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

**கலாநிதி தீபிக்கா உடகம**
**தவிசாளர்**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

பிரதிகள்: கௌரவ பிரதமர்
கௌரவ சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சர்
கௌரவ சகவாழ்வு, உரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர்.
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான செயலகத்தின் தலைவி.

*HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA*

**அருட்தந்தை எழில் ராஜேந்திரன் அவர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள்**

1. **2017 மே மாதம் 16 ஆம் திகதி** : பொலிசார், பிற்பகல் 7.30 மணிக்கு அருட்தந்தை எழில் ராஜேந்திரன் மற்றும் மேலும் இருவரை அழைத்துள்ளனர். முள்ளிவைக்காலில் அமைக்கப்படும் நினைவுத் தூபியின் கல்வெட்டில் பதிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள பெயர்களிடையே எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என அவர்களிடம் வினவப்பட்டுள்ளது.

2. **2017 மே மாதம் 17 ஆம் திகதி** : பொலிசார், முல்லைத்தீவு நீதிபதியவர்களிடமிருந்து முள்ளிவைக்கால் கிழக்கு புனித போல் தேவாலயத்திற்கருகில் காணப்படும் காணியில் நடைபெறவிருக்கும் நினைவுகூரல் வைபவத்தை இரத்துச் செய்வதற்கான தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

3. **2017 மே மாதம் 18 ஆம் திகதி** : பொலிசார், இந்த நீதிமன்றத் தடையுத்தரவை பல இடங்களில் காட்சிப்படுத்தும் வகையில் ஒட்டி அந்த வைபவம் நடைபெறும் இடத்திற்கருகில் எவரும் செல்லக் கூடாதெனவும், அங்கு எந்தவிதமான மதக் கிரியைகளுக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாதெனவும் ஒலிபெருக்கிகளின் ஊடாக அறிவிக்கப்பட்டது.

   பிற்பகல் 1.00 மணியளவில் வாய்மூலமான கூற்றொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வவுனியாவுக்கு வருமாறு அழுத்தம் கொடுக்கும் வகையிலான கோரிக்கையொன்று தொலைபேசி ஊடாக வவுனியா பொலிஸ் அத்தியட்சகரிடமிருந்து அருட்தந்தை ராஜேந்திரன் அவர்களுக்கு விடுக்கப்பட்டது. அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் எழுத்து மூலமான அழைப்பாணையுடன் பொலிசார் அருட்தந்தை ராஜேந்திரன் அவர்களுடைய வீட்டுக்கு வந்தனர்.

4. **2017 மே மாதம் 19 ஆம் திகதி** : கல்வெட்டில் பதிப்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களின் பெயர்கள் அந்த கல்வெட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மையமாகக் கொண்டே வவுனியா பொலிசாரின் விசாரணை அமைந்திருந்தது.

   அன்றைய தினமே, பொலிசார் யாழ்ப்பாணம், இளவாலையில் அமைந்துள்ள அருட்தந்தை ராஜேந்திரன் அவர்களது பெற்றோர் வாழும் வீட்டிற்குச் சென்று இவரது செயற்பாடுகள், அலுவல்கள் அவர் செல்லும் இடங்கள் சம்பந்தமாக விசாரித்துள்ளனர்.

5. **2017 மே மாதம் 20 ஆம் திகதி** : தற்போது விசாரிக்கப்பட்டுவரும் வழங்கு சம்பந்தமாக வாய்மூலக் கூற்றொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக வருமாறு எழுத்து மூலமான அழைப்பாணை முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்திலிருந்து அருட்தந்தை ராஜேந்திரன் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றது. கல்வெட்டு தயாரிக்கும் திட்டம் சம்பந்தமாக பொலிசார் ஊர் மக்களிடமும் விசாரித்தனர். கூற்றொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மே மாதம் 22 ஆம் திகதி பிரதேசத்தின் கிராம அலுவலருக்கு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

6. **2017 மே மாதம் 21 ஆம் திகதி** : பிற்பகல் வெலிகந்தை பிரதிப் பொலிஸ் மா அதிபர் அருட்தந்தை ராஜேந்திரன் அவர்களுடன் தொடர்புகொண்டு மே மாதம் 22 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு செல்லத்

தேவையில்லையெனத் தெரிவித்ததுடன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் பரிசீலணைக்குட்படுத்துவதற்காக கல்வெட்டில் பதிவதற்கு தயார்செய்யப்பட்டிருக்கும் பெயர் பட்டியலை பொலிசுக்கு ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இரவு 9.00 மணிக்கு மீண்டும் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திக்கொண்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பெயர் பட்டியல் பற்றி விசாரித்துள்ளார்.

7. **2017 மே மாதம் 25 ஆம் திகதி :** கல்வெட்டில் பதிவதற்குரிய பெயர்கள் அடங்கிய பட்டியலை அருட்தந்தை ராஜேந்திரன் அவர்கள் ஒப்படைத்தபோதிலும் பட்டியலில் உள்ள நபர்களின் முகவரியும் தேவையென தெரிவிக்கப்பட்டுள்ளது. முகவரிகள் தன்னிடம் இல்லையென அருட்தந்தை ராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தபோது அது தேவையில்லையென பொலிசார் அறிவித்துள்ளனர். சகல பெயர்கள் தொடர்பிலும் விசாரணை முடிவுறுத்தப்படும் வரை கல்வெட்டில் பெயர்களைப் பதியக்கூடாதெனவும் பொலிசார் அவரிடம் தெரிவித்துள்ளனர்.

*HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA*

7-6-2017

His Excellency Maithripala Sirisena
President of the Democratic Socialist Republic of Sri Lanka
Presidential Secretariat
Colombo 1.

Your Excellency,

**Memorialisation and Reconciliation**

The Human Rights Commission has received a complaint from Rev. Fr. Elil Rajendran of the Society of Jesus (Jesuits) Mullaitivu, who has been summoned numerous times by the police to be interrogated in relation to a memorialisation activity he had organised to remember those who lost their lives during the latter stages of the armed conflict. The memorialisation was to be established by carving the names of those who had died on stones to be placed at a permanent memorial in Mullaivaikkal, Mullaitivu.

On several occasions the police had summoned Fr. Elil to appear at different police stations (Mullaitivu and Vavuniya) for questioning about the event. The police had also sought and obtained a judicial injunction to prevent the event from taking place. Following the court order the police had summoned Fr. Elil and had requested him to submit all names that were to be carved on stones for memorialisation to ensure there were no names of LTTE cadres.

Fr. Elil complained to our Commission that repeated questioning by the police at police stations and at his residence on this ceremony constituted harassment and placed fetters on his freedom of movement, expression and association- rights which are enshrined in the Constitution of Sri Lanka. Further, the questioning of Fr. Rajendran's elderly parents has caused them great distress and anxiety.

After a thirty year armed conflict Sri Lanka is at present attempting to rebuild ethnic relations and work towards reconciliation. In this process it is important that all communities have the space and ability to mourn the loss of their loved ones and remember them. Hence, memorialisation is an important and integral part of the reconciliation process. In Sri Lanka we have built many memorials to commemorate the soldiers who have lost their lives during the armed conflict. Likewise, all communities should have the right to construct memorials to remember their family members and loved ones. The fact that the person who died was a LTTE cadre should not be used as the reason to deny the family to mourn and remember their loved one. Every family has

the right to remember and memorialise their loved ones irrespective of their status or political beliefs.

The Commission is of the view that allowing families the space to do so would enable them to feel they too have, and are able to exercise their rights as citizens of Sri Lanka, and are part of a common journey towards reconciliation. Denial of such an opportunity will only serve to deepen ethnic divisions and hamper reconciliation efforts.

In this spirit, the Commission requests Your Excellency, particularly in your capacity as Minister of National Integration and Reconciliation, to ensure the right of families to engage in memorialisation activities, and also the security of persons who engage in such activities.

We set out in the attached annex the chronology of events as provided to the Commission by Rev. Fr. Rajendran.

Dr. Deepika Udagama
Chairperson

Cc: Hon. Prime Minister
Hon. Minister of Law & Order
Hon. Minister of Co-existence, Dialogue and Official Languages
Chairperson, Office of National Unity and Reconciliation

*HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA*

## MAIN FACTS OF THE COMPLAINT BY FR. ELIL RAJENDRAN TO THE COMMISSION

1. **16th May 2017**: Fr Elil Rajendran and two others were summoned by the Police at 7.30 pm. They were asked if any LTTE names were included in the names being carved into stones at the memorial in Mullivaaykkal.

2. **17th May 2017**: The Police approached the Mullaitivu Magistrate and were granted a ban on commemoration events on land adjacent to St Pauls Cathedral, Mullivaaykkal East.

3. **18th May 2017**. Police pasted the court order at various places, and via loud speakers announced that no one should go near the site and that no religious observances would be allowed.

   Around 1 pm Fr. Rajendran received a phone call from Vavuniya SP demanding that he come to Vavuniya to record a statement. The same night around 8.30 pm the police visited Fr. Rajendran's residence with written summons.

4. **19 May 2017** - The questioning by the police in Vavuniya focused on whether names of LTTE cadres were on the stones.

   On the same day Fr Rajendran's parents' house in Ilavalai, Jaffna, was visited by the police who inquired from them about his work, activism and whereabouts.

5. **20 May 2017** – Fr. Rajendran received written summons from Mullaitivu HQI to record a statement in connection with the ongoing case on 22 May 2017. Police made inquiries from the villagers about the stone-carving project. The area Grama Niladhari was also summoned to the police station on 22 May to record a statement.

6. **21 May 2017** - DIG Welikanda called Fr Rajendran in the evening and informed him that he will not have to go to the Mullaitivu Police on 22 May but requested him to submit the list of names carved on the stone to the police for the TID to investigate. The DIG called him again at 9 pm and inquired about the list.

7. **25 May 2017-** Fr. Elil handed over the list of names to be carved on the stones but the police said they wanted the addresses of the names on the list. When Fr. Elil said he didn't have the names the police said they didn't want the list. The police also told him that he could not carve anymore stones until they complete their investigation of all the names.